ஓம் சரவணஜோதியே நமோ நம

**ஆறுமுக அரங்கமகா தேசிகர் அவர்களின் ஆசி நூல்**

15.12.2024

1. அருள் காட்டும் அப்பனவர் அடிகள் போற்றி
அரங்கன் யான் அருளாசி தன்னை இனிதே
வரமென குரோதி ஆண்டு கார்த்திகை திங்களில்
வல்லமைபட முழுமதி பூஜையோடு கூடிய

2. அருளாசி விளக்கமாக பிரணவக்குடிலுக்கும்
அன்பர் பெருமக்கட்கும் அரங்கன் யான்
ஆசி தனை அருளுவேன்
அருளவே இந்தவித உயர்வான ஞானிகளின் பூஜை

3. இயம்பிடுவேன் பிரணவக் குடிலில்
மகா சக்திகளெல்லாம் சூட்சுமமாக இறங்கி
உயர் பூஜையாக நடத்திவர
என் அன்பர் படைகள் இணைந்து செய்யும்

4. முழுமதி பூஜை அளவில்லா சக்தி கொண்டது
இந்த பூஜை வழி வந்து கலந்து கொள்பவர்களுக்கும்
இந்த பூஜைதனில் தொண்டு செய்பவர்கட்கும்
பூஜைதனில் பொருளுதவி செய்து கொண்டு

5. தொடர்ந்து தருமத்தை காத்து வருபவர்கட்கும்
இனிதே அரங்கன் என் பரிபூரண ஆசியும்
பரிபூரண பலமும் உண்டு உண்டு
மிகைபட அன்பர் பெருமக்களும்

6. மேலான அரங்கன் என் சன்மார்க்க வழிமுறையை
வகைபட உலகமே ஏற்கும் வண்ணம்
வல்லமை கொண்டு இந்த முழுமதி கால பூஜையும்
மகான்களுடைய பூஜையும் உயர்வாய் கொண்டு செல்லக் கூடும்

7. அன்னதனால் இன்புற்று என் தொண்டர் படைகளும்
குடில் தொடர்பு கொண்டு வருகின்ற அன்பர் பெருமக்களும்
மகான்களுடைய நாமஜெபத்தை சொல்லிக் கொண்டு
இயன்ற வண்ணம் தர்மத்தை தொடர்ந்து கடைப்பிடிக்க வேணும்

8. இந்தவித சன்மார்க்க நெறி
இந்த பேருலகை மாற்றுவது உறுதி
அன்னதனால் ஓங்காரக்குடிலின்
தொண்டர் பெருமக்களும்

9. ஓங்காரக்குடிலுக்கு பொருளுதவி செய்து கொண்டு வருபவர்களும்
ஆசான் அரங்கன் என் நாமஜெபத்தை சொல்லிக் கொண்டு

அச்சமற அவரவர் தொண்டு தொழில் தொடர்பு கூட்டி இருக்க
அன்பர்கட்கு பொருளாதார பலத்தோடு தேகபலம் மனபலம்

10. சர்வபலம் கூட்டி அரங்கன் யான் காப்பேன்
ஓங்காரக்குடிலின் தர்மம் வளர வளர
இந்த உலகமெங்கும் தர்மத்தின் பலம் அதிகமாகி
இயற்கை வழி இடர்பாடுகள் உலகை அச்சுறுத்துகின்ற தீதான

11. செயல்பாடுகள் அத்துணையும் ஒழிந்து
முடிவுகண்டு அரங்கன் என் மார்க்கமே
உலகத்தை காக்கின்ற தலையாய
மார்க்கமாக மாறி இந்த பேருலகம் அற்புதம் காணும்

12. அதற்குண்டான சக்தியாகத்தான்
முழுமதிதோறும் மகா சக்திகள்
ஓங்காரக்குடிலின் பூஜையிலும் தர்மத்திலும் கலந்து
வரம் தந்து அருளுகின்றனர்

13. அன்னதனால் அன்பர் பெருமக்கள்
இவ்வாறு மாதாந்திரம் நிகழுகின்ற
இந்த முழுமதி பூஜையில்
கட்டாயம் வந்து கலந்து கொண்டு

14. கட்டாயம் வந்து தொண்டாற்றி
கட்டாயம் தர்மத்தை காக்கும் வண்ணம்
பொருளுதவி செய்து கொண்டு செயல்பட
அவர்கட்கெல்லாம் அரங்கன் யான்

15. மகா சக்தியாய் சர்வ பலமாய்
நின்றருள் புரிந்து காத்தருளுவேன்
அவர்களோடு அவர்கள் வம்சங்களும் தழைக்க
அவர்களின் வம்சா வம்சம்

16. அரங்கன் என் சன்மார்க்க வழியே திளைக்க
அரங்கன் யான் அருள் செய்வேன்
அரங்க மகான் யான் அருளிய
அருளாசி விளக்கம் முற்றும் முற்றே.

–சுபம்–

ஓம் முருகப்பெருமான் திருவடிகள் போற்றி